
# தீர்க்கதரிசி ஜோசப் ஸ்மித்தின் சாட்சி

---

பிற்காலப் பரிசுத்தவான்களின்
இயேசு கிறிஸ்து சபை





## கிறிஸ்துவின் போதனைகள்

வேதாகமத்திலுள்ள இயேசு கிறிஸ்துவின் போதனைகள் மனித இனத்திற்கு நெடுங்காலமாகவே ஏவுதலுக்கு ஓர் மூலகாரணமாக இருந்து வருகிறது. இயேசு கிறிஸ்துவின் மற்றொரு ஏற்பாடான வேதத்தின் துணை தொகுப்பான மார்மன் புத்தகத்தில் இரட்சகரின் அதிகப்படியான போதனைகள் அடங்கியிருக்கிறது. அவைகள் உங்களுடைய வாழ்வில் ஏவப்பட்ட வழிநடத்துதலை அளிப்பதின் மூலம் நிலையான சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் உங்களுக்குக் கொண்டுவருகிறது.

இயேசு கிறிஸ்துவின் மற்றொரு ஏற்பாடான மார்மன் புத்தகத்தின் உங்களுடைய இலவசப் பிரதியைப் பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ள எழுதுங்கள்.

பிற்காலப்
பரிசுத்தவான்களின்
**இயேசு கிறிஸ்து**
சபை

www.mormon.org

© 2005 by Intellectual Reserve, Inc.
எல்லா உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன
அ.ஐ.நா-வில் அச்சிடப்பட்டது
ஆங்கில அங்கீகாரம் 2/05. மொழிபெயர்ப்பு அங்கீகாரம்: 2/05
The Testimony of the Prophet Joseph Smith ன் மொழிபெயர்ப்பு
Tamil
முன் அட்டை ஓவியம்: *சகோதரர் ஜோசப்* - டேவிட் லின்ட்ஸ்லே
பின் அட்டை ஓவியம்: *அவர் உயிர்த்தெழுந்தாரிலிருந்து* விளக்கம் - டெல் பார்சன்

TAMIL
4 02326 67418 5
32667 418

## ஜோசப் ஸ்மித் ஒரு தீர்க்கதரிசி

*ஜோசப் ஸ்மித் 14 வயதாயிருக்கும்போது, எந்த சபையில் சேரவேண்டுமென்பதை தெரிந்துகொள்ளத் தேவனிடம் கருத்தாய் ஜெபித்தார். இந்த ஜெபத்திற்கு மறுயுத்திரமாக பிதாவாகிய தேவனும் அவரது குமாரன் இயேசு கிறிஸ்துவும் ஜோசப்புக்கு பிரசன்னமாகி இயேசு கிறிஸ்துவின் மெய்யான சபை பூமியில் இல்லையென்றும் அதை மறுஸ்தாபிதம் செய்ய அவர்கள் தெரிந்தெடுத்திருப்பதாகவும் அவரிடம் சொன்னார்கள்.*

*அந்த நாளிலிருந்து, பிற்காலப் பரிசுத்தவான்களின் இயேசு கிறிஸ்து சபையை ஸ்தாபிக்க, கடைசி நாட்களில் தேவனின் பணிவிடையில் கடினமாய் உழைத்தார். இயேசு கிறிஸ்துவே உலக இரட்சகரும் மீட்பருமானவர் என்று சபையின் விசுவாசமுள்ள அங்கத்தினர்கள் சாட்சி பகர்கிறார்கள். பூமியில் ஒரு தீர்க்கதரிசிக்கு வெளிப்படுத்துகிறதின் மூலமாக இயேசு தமது சபையை இன்று வழிநடத்துகிறார். ஜோசப் ஸ்மித் அப்படியான ஒரு தீர்க்கதரிசியாயிருந்தார். ஜோசப் ஸ்மித் நிறைய காரியங்களை அவரது வாழ்வில் நிறைவேற்றியிருந்தாலும், இயேசு கிறிஸ்துவின் சாட்சியாகவும் ஒரு சீடராகவும் இருக்கும்படி தம்மை அவர் ஒப்புவித்தது அதிக முக்கியத்துவமானது. அவரைப்பற்றிய அநேக சாட்சிகளுக்குப்பின் அவர் ஜீவிக்கிறார் என்று அவரைப்பற்றி கொடுக்கப்படுகிற இந்த சாட்சிதான் எல்லாவற்றிற்கும் இறுதியானது. (கோட்பாடும் உடன்படிக்கைகளும் 76:22). இரட்சகராலே கொடுக்கப்பட்ட அநேக சாட்சிகளுக்குப் பின்பு, அனைத்திலும் இறுதியானதாக அவர் ஜீவிக்கிறார் என்று தாங்கள் சாட்சி பகர்ந்ததாக தீர்க்கதரிசி ஜோசப் ஸ்மித்தும் சிட்னி ரிக்டனும் கூறினர். (கோ.உ. 76:22பார்க்கவும்)*

*பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் இந்த தீர்க்கதரிசியின் சாட்சியைப் பெற்றுக் கொள்கிறவர்கள், அவர் செய்திட வேண்டுமென அழைக்கப்பட்ட பணியின் சத்தியத்தைத் தெரிந்து கொள்வார்கள். ஜோசப் ஸ்மித் பணிவிடை செய்து வணங்கிய இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் மூலமாக வரும் சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் அவர்கள் தெரிந்துகொள்வார்கள்.*



*எந்த சபையில் சேருவது என்று தீர்மானிக்க ஜோசப் வழிநடத்துதலுக்காக வேதாகமத்தைப் புரட்டிப் பார்த்தார். அங்கே தேவனிடத்தில் கேட்க வேண்டும் என்று படித்தார்.*

### எந்த சபை சரியானது?

*ஜோசப் ஸ்மித் ஷரானிலுள்ள வெர்மன்டில் 1805 ஆம் ஆண்டு பிறந்தார். அவரது 14 வது வயதில் அவருடைய குடும்பத்துடன் நியூயார்க்கில் வாழ்ந்து கொண்டிருந்த போது, எந்தச் சபையில் சேரவேண்டுமென்று வாஞ்சையுடன் சிந்தித்துக் கொண்டிருந்த காலத்தில் இந்த நிகழ்ச்சிகளின் விபரங்கள் ஆரம்பமானது. பின்வருவது ஜோசப்பின் சொந்த வார்த்தைகளிலே எழுதப்பட்ட அவருடைய அனுபவமாகும்.*

இந்த எழுச்சிமிக்க நேரத்தில் எனது மனம் பாரமான சிந்தனையிலும் அமைதியின்மையிலும் அலைக்கழிக்கப்பட்டிருந்தது. நான் என்ன செய்ய வேண்டும்?இவைகளில் எந்த பிரிவுகள் சரியானது? அல்லது அவைகள் எல்லாமுமே ஒருமித்து தவறானதா? அவைகளில் ஏதாவது ஒன்று சரியானதென்றால் அது எது? மேலும் அதை நான் எப்படி தெரிந்து கொள்வது? என்று அடிக்கடி எனக்குள் கேட்டுக்கொண்டேன்.

இந்த மதவாதிகளின் பிரிவுகளுக்குள்ளேயுள்ள போட்டிகளால் ஏற்பட்ட தீவிரமான பிரச்சினைகளால் நான் வியாகுலத்திலிருந்தபோது ஒரு நாள் யாக்கோபின் நிருபம் முதல் அதிகாரம் ஐந்தாவது வசனத்தைப் படித்து கொண்டிருந்தேன். அதில் உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் யாவருக்கும் சம்பூரணமாய் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும் என்று எழுதப்பட்டிருந்தது.

சத்திய வேதத்தில் உள்ள எப்பகுதியும் ஒரு மனிதனுடைய இருதயத்திற்குள் ஒருக்காலும் வராத அளவிற்கு இத்தருணத்தில் இந்த வேதப்பகுதி மிகுந்த வல்லமையுடனே என் மனதிற்குள் வந்தது. என் இருதயத்தின் ஒவ்வொரு உணர்ச்சிக்குள்ளுமாக இந்த வேதப்பகுதி மிகுந்த

வல்லமையோடே நுழைவதைப் போல் தோன்றியது. எந்த மனிதனுக்காவது தேவனிடத்திலிருந்து ஞானம் தேவையாக இருக்குமானால், அது எனக்குத்தான் தேவை என்று அறிந்து அந்த வேதப்பகுதியை மறுபடியும், மறுபடியும் வாசித்துத் தியானித்தேன். ஏனெனில் நான் எப்படி செயல்பட வேண்டும் என்பதை அறியாதிருந்தேன், மேலும் அச்சமயம் எனக்கிருந்த ஞானத்தைக்காட்டிலும் அதிக ஞானத்தைப் பெற்றுக்கொண்டாலொழிய நான் ஒருக்காலும் அறியமுடியாது என்று உணர்ந்தேன். ஏனெனில் பல்வேறான சபைகளைச் சார்ந்த போதகர்கள் வேதத்தின் அதே பகுதிகளை வித்தியாசமாக விளங்கிக்கொண்டு சத்திய வேதத்தை ஆராய்ந்து படிப்பதின் மூலம் உண்டாகக்கூடிய உண்மையான விசுவாசத்தை நாசம் செய்கிறவர்களாக இருந்தனர்.

கடைசியாக ஒன்று, நான் இருளிலும் குழப்பத்திலுமே நிலைத்திருக்க வேண்டும், அல்லது யாக்கோபு வழி காட்டுகிறபடி செய்யவேண்டும். அதாவது தேவனிடத்தில் ஞானத்தைக் கேட்கவேண்டும் என்ற முடிவிற்கு வந்தேன். ஞானத்தில் குறைவுள்ளோருக்கு அவர் ஞானத்தை அளித்து, கடிந்துகொள்ளாமல் சம்பூரணமாய் கொடுக்கிறாரென்றால், நான் முயற்சித்துப் பார்ப்பேன் என முடிவெடுத்து கடைசியாக தேவனிடத்தில் கேட்கும்படியான தீர்மானத்திற்கு வந்தேன்.

## ஜோசப் ஸ்மித்தின் முதல் தரிசனம்

இதற்கிசைவாக தேவனிடத்தில் ஞானத்தைக் கேட்பது என்ற தீர்மானத்தின்படி, ஆயிரத்து எண்ணூற்று இருபதாம் ஆண்டு, வசந்த காலத்தின் ஒரு ரம்மியமான தெளிவான காலை நேரத்தில் இம்முயற்சியை செய்யும்படி காட்டுக்குள் சென்றேன். என் வாழ்நாளிலேயே இவ்விதமாக முயன்றது இதுதான் முதல் முறையாகும். ஏனெனில் எனக்கிருந்த எல்லாக் கவலைகளின் மத்தியிலும் இதுவரை சத்தமாக ஜெபிக்க முயன்றதே கிடையாது.



*அவர்களில் ஒருவர் அடுத்தவரை சுட்டிக் காட்டி “இவர் என் நேச குமாரன் இவருக்குச் செவி கொடும்” என்று சொன்னார்.*

செல்லவேண்டும் என்று ஏற்கெனவே திட்டமிட்ட இடத்திற்கு சென்று, என்னைச் சுற்றிலும் பார்த்து நான் தனிமையாகத்தான் இருக்கிறேன் என்பதை நிச்சயித்துக் கொண்ட பின், நான் முழங்காற்படியிட்டு, என் இருதயத்தின் வாஞ்சைகளைத் தேவனிடத்தில் ஏறெடுக்க ஆரம்பித்தேன். இவ்விதமாக ஆரம்பித்த அக்கணத்திலேயே ஏதோ ஒரு விசேஷமான வல்லமை என்னைப்பற்றி பிடித்துக் கொண்டது. நான் பேசக்கூடாதபடி அதிசயமான ஒரு சக்தி, என் நாவை கட்டிப்போடத்தக்கதாக என்னை மேற்கொண்டது. நான் திடீரென அழிவிற்குள் தள்ளப்பட்டதைப் போல கொஞ்ச நேரம் எனக்குத் தோன்றியது.

ஆனால் என்னைப்பற்றி பிடித்துக்கொண்ட இந்த விரோதியின் வல்லமையிலிருந்து என்னை விடுவிக்கும்படி தேவனை நோக்கிக் கூப்பிட என் முழு சக்தியையும் உபயோகித்ததின் மூலம், மேலும் நான் சஞ்சலத்திலே மூழ்கி அழிவிற்கு ஓர் கற்பனையான அழிவிற்கு அல்ல, ஆனால் எந்த ஜீவியிலும் நான் முன் ஒருபோதும் கண்டிராத அதிசயமான வல்லமையைக் கொண்டிருந்த கண்ணுக்குப் புலனாகாத உலகிலிருந்து வரும் ஓர் உண்மையான ஜீவியின் வல்லமைக்கு என்னை ஒப்புவித்துவிட நான் ஆயத்தமாக இருந்த அத்தருணத்தில் தானே, இந்த மிகப் பயங்கரமான தருணத்திலேதான், சூரிய பிரகாசத்தை மிஞ்சக்கூடிய ஓர் ஒளி ஸ்தம்பத்தை சரியாக என் தலைக்குமேலே கண்டேன். அவ்வொளி ஸ்தம்பம் என் மீது வந்து விழும்வரை படிப்படியாக இறங்கியது.

அது தோன்றின உடனே என்னைக் கட்டியிருந்த விரோதியின் சக்தியில் இருந்து நான் விடுவிக்கப்பட்டதை உணர்ந்தேன். அந்த ஒளி இறங்கி என்மேல் தங்கினபோது, நான் மனித ரூபங்களைக் கொண்ட நபர்களைக் கண்டேன். அவர்களுடைய பிரகாசமும் மகிமையும் விவரிக்கக்கூடாதிருந்தன. அவர்கள் ஆகாயத்தில் எனக்குமேல் நின்று கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர் என்னைப் பெயர் சொல்லி அழைத்து, என்னோடு பேசி, தன் அருகில் நின்று கொண்டிருந்த அடுத்தவரை சுட்டிக்காட்டி இவர் என் நேச குமாரன் இவருக்கு செவி கொடுங்கள் என்று சொன்னார்.



நான் இந்தப் பிரிவுகளிலெல்லாம் எதிலே சேர்ந்து கொள்வது என அறிந்து கொள்ளும்படி இவற்றிலே எது சரியானது என்று அறிந்து கொள்வதே கர்த்தரிடத்தில் நான் விசாரித்தறிந்து கொள்ள வேண்டுமென்று போனதின் நோக்கமாயிருந்தது. பேசக்கூடிய நிலையை அடைந்தவுடனேயே அவ்வொளியில் எனக்கு மேல் நின்று கொண்டிருந்த மனித ரூபமுடைய நபர்களை நோக்கி, இந்தச்சபை பிரிவுகளிலெல்லாம் எது உண்மையானது என்றும் (ஏனெனில் அவை எல்லாம் தவறானவை என்பது, அந்நேரத்தில் சிறிதும் என் மனதில் தோன்றவில்லை) அவற்றில் எப்பிரிவில் நான் சேரவேண்டும் என்றும் விசாரித்தேன்.

அவை ஒன்றிலும் நான் சேர்ந்து கொள்ளக்கூடாது, ஏனெனில் அவை எல்லாம் தவறான விசுவாச உபதேசங்களைக் கொண்டவை, என்ற பதில் எனக்குக் கிடைத்தது. என்னோடு பேசின அந்த நபர், அவர்களின் உபதேசங்கள் யாவும் தன் பார்வையில் அருவருப்பானதாக இருக்கிறது, அவ்வுபதேசங்களை அறிக்கையிடும் யாவரும் சீர்கெட்டவர்கள். இவர்கள் தங்கள் உதட்டளவில் மட்டும் என்னிடம் நெருங்கிச் சேர்கிறார்கள், ஆனால் அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது.

தேவ பக்தியை பாவனையாக வெளிக்காட்டி மனிதருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதிக்கிறார்கள். ஆனால் தேவ பக்தியின் வல்லமையையோ மறுதலிக்கின்றனர் என்று என்னிடம் கூறினார். அவர் மீண்டும் அவைகளில் நான் எதிலும் சேரக்கூடாது என்று கூறி, வேறு பல விஷயங்களையும் எடுத்துக் கூறினார். அவைகளை இவ்வேளையில் என்னால் எழுத இயலாது. மீண்டும் என் சுயநினைவு எனக்கு வந்தவுடன் வானத்தைப் பார்த்த வண்ணமாக நான் தரையில் படுத்துக் கொண்டிருந்ததை உணர்ந்தேன். அந்த ஒளி என்னைவிட்டு நீங்கியபோது நான் பலவீனமானேன், ஆனால் சீக்கிரமே ஓரளவிற்கு சரியான நிலைக்கு வந்து நான் வீட்டிற்குப் போனேன்.

## துன்புறுத்தல்

*தேவனுக்கு ஜோசப் கீழ்ப்படிந்து, அப்போதிருந்த எந்த சபையிலும் சேரவில்லை. அவர் கண்டவைகளையும் கேட்டவைகளையும் ஜனங்களிடம் கூறியபோது, எதிர்ப்பையும், துன்புறுத்தலையும் அனுபவிக்க ஆரம்பித்தார்.*

என்னுடைய இந்த சம்பவத்தைச் சொன்னது, மதப்போதகர்கள் மத்தியில் மிகப் பெரியளவில் தவறான அபிப்பிராயத்தைத் தூண்டிவிட்டதுமின்றி பெரிய துன்புறுத்தலுக்கும் காரணமாக இருந்தது. இவை நாளுக்கு நாள் தொடர்ந்து பெருகிக்கொண்டே வந்தது. நான் பதினான்கு வயதுக்கும் பதினைந்து வயதுக்கும் இடைப்பட்ட ஒரு அறியப்படாத சிறுவனாக இருந்த போதிலும் என் வாழ்க்கைச் சூழல் உலகத்தில் எவ்விதமான விளைவையும் உண்டாக்கக்கூடாத, ஒரு சிறுவனாய் காணப்பட்டாலும் எனக்கு விரோதமாகப் பொதுமக்களுடைய சிந்தனைகளைத் தூண்டி விடுவதற்கும், கொடிய துன்பங்களை உருவாக்கவும் உயர்ந்த நிலையிலுள்ள மனிதர் போதுமானளவிற்கு கருத்தாய் கவனித்து வந்தார்கள். இது அனைத்துப் பிரிவினரிடமும் பொதுவாயிருந்தது, அதாவது என்னைத் துன்புறுத்தும்படி எல்லோருமே ஒன்று சேர்ந்து கொண்டனர்.

அதே சமயத்திலும் அதற்குப் பின்னும் இவை அடிக்கடி என்னை மிகவும் ஆழ்ந்த சிந்தனைக்குட்படுத்தின. அன்றன்று வேலை செய்வதின் மூலம் என் தேவைகளுக்கானவற்றை குறைந்த அளவில் பெறவேண்டிய நிர்ப்பந்த நிலையில் உள்ள ஒரு அறியப்படாத பதினான்கு வயதைச் சற்றே கடந்த ஒரு ஏழைச் சிறுவனாயிருந்து, அந்த நாட்களில் மிகவும் பிரபலமான மதப்பிரிவுகளைச் சார்ந்த பெரிய மனிதர்களின் கவனத்தை ஈர்க்கக்கூடிய போது

மான முக்கியத்துவத்தையுடையவன் என்று எண்ணப்பட்டதும், அவர்களுக்குள் ஒரு கொடூரமான துன்புறுத்தல் மற்றும் நிந்தையின் ஆவியை ஏற்படுத்தும் வண்ணம் காணப்பட்டதும் எவ்வளவு விசித்திரமாயிருந்தது. ஆனால் விசித்திரமோ, இல்லையோ இத்தகைய நிலை அன்று இருந்து வந்ததுமின்றி அது அடிக்கடி எனக்கு ஒரு பெரிய துக்கத்தை விளைவிக்க காரணமாகவும் இருந்தது.

இருந்தபோதிலும் நான் தரிசனத்தைக் கண்டேன் என்பது உண்மை. பவுல் அகிரிப்பா ராஜாவின் முன்பாக தான் ஓர் ஒளியைக் கண்டு ஓர் குரலைக் கேட்டபோது பெற்ற தரிசனத்தைக் குறித்த காரியங்களை விளக்கிக் கூறினான். ஆனால் ஒரு சிலரே அவன் சொன்னவைகளை நம்பினர். சிலர் அவனைப் பொய்யன் என்றும் வேறு சிலர் பயித்தியம் பிடித்தவன் என்றும் கூறினர். அவர்கள் அவனைப் பரிகசித்து நிந்தித்தனர். ஆனால் இவைகளெல்லாம் அவனது தரிசனத்தின் உண்மையை அழிக்கவில்லை. அப்பொழுதிலிருந்து பவுல் உணர்ந்தளவிற்கு நானும் உணர்ந்து சிந்தனை செய்தேன். அவன் தரிசனத்தைக் கண்டான். தனக்குத் தரிசனம் கிடைத்தது என்பதை அவன் அறிவான். வானத்தின் கீழ் அவனுக்கு விரோதமாக உண்டாக்கப்பட்ட எல்லாத் துன்புறுத்தல்களும் இவ்வுண்மை நிகழ்ச்சியை வேறு விதமாக மாற்றக் கூடவில்லை. அவர்கள் அவனை மரணபரியந்தம் துன்பப்படுத்தினாலும் கூட, தான் ஓர் ஒளியைக் கண்டதையும் தன்னோடு பேசிய ஓர் குரலைக் கேட்டதையும் அறிந்திருந்தான். இன்னும் தன்னுடைய கடைசி மூச்சு இருக்கும்வரையிலும் அதை அவன் அறிவான். மேலும் அவரை வேறு விதமாக நினைக்கவோ அல்லது நம்பவோ செய்ய முழு உலகத்தாலும் கூடாமற்போயிற்று.

இதேபோன்றுதான் என் நிலையும் இருந்தது. நான் உண்மையாகவே ஒரு பிரகாசமான ஒளியைக் கண்டேன். அந்த ஒளியின் மத்தியில் இரண்டு மனித ரூபமுடைய நபர்களைக் கண்டேன். அவர்கள் இருவரும் உண்மையாகவே என்னுடன் பேசினர். நான் ஒரு தரிசனத்தைக் கண்டேன் என்று சொன்னதினால் நான் வெறுக்கப்பட்டு, துன்பப்படுத்தப்பட்ட போதிலும் நான் தரிசனம் கண்டது உண்மையே. இவ்வாறு நான் சொன்னதிற்காக அவர்கள் இவ்விதமாக என்னைத் துன்பப்படுத்தின வேளையில், பரிகாசம் செய்யும்போது, பொய்யாகவும், தவறாகவும் எல்லாவிதமான தீமையானவைகளையும் எனக்கு விரோதமாகக் கூறினபோதும், என் இருதயத்திலே இவ்வாறாக சொல்லும்படி வழிநடத்தப்பட்டேன். சத்தியத்தைக் கூறினதற்காக என்னை ஏன் துன்பப்படுத்துகிறீர்கள்? நான் உண்மையாகவே தரிசனத்தைக் கண்டேன். தேவனை எதிர்க்க நான் யார்? நான் உண்மையிலேயே கண்டதை மறுதலிக்க வேண்டுமென்று இந்த உலகம் ஏன் எண்ணுகிறது? நான் ஒரு தரிசனத்தைக் கண்டேன். அதை நான் அறிவேன். தேவன் அதை அறிவார் என்பதையும் நான் அறிவேன், இதை நான் மறுக்கமுடியாது மறுக்கவும் துணியமாட்டேன் அப்படிச் செய்வதினால் நான் தேவனுக்கு கோபமுண்டாக்கி ஆக்கினைக்குள்ளாவேன் என்பதையும் அறிவேன்.

இவர்களில் எந்தப் பிரிவினரிடத்திலும் சேர்ந்து கொள்ள வேண்டிய கடமை எனக்கில்லை என்றும், மறுபடியும் நடத்தப்படும்வரை இருக்கிறபடியே தொடர்ந்து இருக்க வேண்டுமென்றும் தீர்மானித்து, மதபேதங்கள் நிறைந்த இந்த உலகத்தைப் பொறுத்த மட்டில் என் மனதை திருப்தியடையச் செய்தேன். ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், தேவனிடத்தில் கேட்டுப் பெற்றுக் கொள்ளக்கடவன், கடிந்து கொள்ளப்படமாட்டான், என்ற யாக்கோபின் சாட்சியானது உண்மை என்று நான் கண்டேன்.

> *நான் ஒரு தரிசனத்தைக் கண்டேன் அதை நான் அறிவேன், தேவன் அதை அறிவார் என்பதையும் நான் அறிவேன், நான் மறுக்க முடியாது மறுக்கவும் துணியமாட்டேன்.*

ஆயிரத்து எண்ணூற்று இருபத்து மூன்றாவது வருடம் செப்டம்பர் மாதம் இருபத்தி ஒன்றாம் தேதிவரை நான் எப்பொழுதும்போல் என் அன்றாட வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்திக்கொண்டு வந்தேன். நான் ஒரு தரிசனத்தைக்கண்டேன் என்ற உண்மையைத் தொடர்ந்து உறுதிபடுத்திக் கொண்டு வந்தமையால், அப்பொழுது மதங்களைச் சேர்ந்தவர்களும் மதங்களைச் சேராதவர்களுமான எல்லா வகுப்பினராலும் நான் கடுமையாகத் துன்பப்படுத்தப்பட்டேன்.

நான் தரிசனத்தைக் கண்ட காலத்திற்கும் ஆயிரத்து எண்ணூற்று இருபத்து மூன்றாவது வருடத்திற்கும் இடையில், அந்நாட்களில் இருந்துவந்த மதப்பிரிவுகள் ஒன்றிலும் சேராதபடி தடுக்கப்பட்டதாலும் மிகவும் இளைஞனாயிருந்தாலும் எனக்கு நண்பர்களாக இருந்தவர்களாலும் என்னை அன்பாக நடத்த வேண்டியவர்களாலும் நான் துன்புறுத்தப்பட்டதாலும் மேலும் வஞ்சிக்கப்பட்டிருந்தேன் என்று அவர்கள் கருதியிருந்தால் என்னை மறுபடியும் அவர்கள் நிமித்தம் இழுக்கத்தக்கதாகச் சரியான முறைகளைக் கையாண்டு, பட்சமுள்ள வகையில் கடும்முயற்சி செய்திருக்க வேண்டும். பலவிதமான சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டேன். சமுதாயத்தில் எல்லா வகைப்பட்ட மக்களுடனும் கலந்து கொள்ளும் சூழ்நிலையில் நான் அடிக்கடி புத்தியில்லாத தவறுகளில் விழுந்து இளைஞர்களுக்கு உண்டாகும் பலவீனங்களிலும் மனித இயல்புகளுக்குரிய குற்றங்களிலும் வீழ்ந்தேன். தேவனுடைய பார்வையில் குற்றமாகக் காணப்படக்கூடிய பலவிதமான சோதனைகளுக்குள்

என்னை நடத்தினவைகளைச் சொல்லிட நான் மனஸ்தாபப் படுகிறேன். நான் இந்த அறிக்கையை செய்வதினால் நான் பெரிய அல்லது கொடூர பாவங்கள் செய்த குற்றவாளி என்று யாரும் கருத அவசியமில்லை. இவ்விதமான பாவங்களைச் செய்யும் குணம் என் இயற்கைச் சுபாவத்தில் ஒரு போதும் இருந்ததில்லை.

### மரோனியின் வருகை

*ஜோசப் தேவனைக் கண்டதை அவர் நிராகரிக்க மறுத்ததால் துன்புறுத்துதல் தொடர்ந்தது. 1823-ம் வருடம், செப்டம்பர் 21ம் தேதி ஜோசப் படுக்கைக்குப் போன பின்பு, கர்த்தருக்கு முன்பாக தனது நிலையைத் தெரிந்து கொள்ள ஜெபித்தார். தூதனாகிய மரோனி அவருக்குத் தோன்றினான்.*

மேலே சொல்லப்பட்ட செப்டம்பர் மாதம் இருபத்தி ஒன்றாம் தேதி மாலையில், அந்த இரவில் தூங்குவதற்காக நான் படுக்கைக்குச் சென்ற பின்பு தேவனுடைய பார்வையில் என் நிலையையும் என் தகுதியையும் நான் அறிந்து கொள்வதற்காக எனக்கு ஒரு வெளிப்படுத்துதல் கிடைக்கும்படியாகவும் சர்வ வல்ல தேவனிடம் ஜெபம் செய்யவும் விண்ணப்பம் செய்ய ஆரம்பித்தேன். முன்னமே எனக்கு கொடுக்கப்பட்ட வெளிப்பாடு போன்று நான் ஒரு



ஜோசப் ஸ்மித்தின் முதல் தரிசனத்திற்கு மூன்று வருடங்களுக்குப் பிறகு இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மறுஸ்தாபிதத்தைப்பற்றி ஜோசப்பிற்கு உபதேசிக்கும்படி மரோனி என்ற தூதனை தேவன் அனுப்பினார்.

தெய்வீக வெளிப்படுத்துதலைப் பெறுவேன் என்று எனக்கு முழு நம்பிக்கை இருந்தது.

இவ்விதமாக தேவனை நோக்கி விண்ணப்பிக்க ஆரம்பித்த நேரத்தில், என்னுடைய அறையில் ஒரு வெளிச்சம் தோன்றினதைக் கண்டேன். நடுப்பகலில் உள்ள வெளிச்சத்திற்கு மேலாய் அந்த அறை பிரகாசிக்கும்வரை அந்த வெளிச்சமானது அதிகரித்துக் கொண்டே வந்தது. அதே சமயத்தில் உடனே, மனித ரூபமுடைய ஒரு நபர் என் படுக்கையின் அருகில் தோன்றினார். இவர் ஆகாயத்தில் நின்று கொண்டிருந்தார். அவரது பாதங்கள் தரையைத் தொடவில்லை.

மிகவும் பிரகாசமான ஒரு தளர்ந்த, மிகுதியான வெண்மையுடைய, அங்கியை அவர் அணிந்திருந்தார். அந்த வெண்மையானது பூமியிலே நான் என்றுமே கண்டிராத வெண்மையாயிருந்தது, பூமிக்குரிய எப்பொருளும் இவ்விதமான அதிக பிரகாசத்துடனும் வெண்மையுடனும் தோன்றும்படி செய்யப்படக்கூடும், என்று நான் நம்புகிறதில்லை. அவருடைய கைகளும், மணிக்கட்டுக்குச் சற்றே மேல் வரையில் அவருடைய கரங்களும் வெளியரங்கமாயிருந்தன. அப்படியே அவருடைய கால்களைப் போலவே கணுக்காலுக்குச் சற்றே மேல் வரையில் வெளியரங்கமாயிருந்தன. நான் அவருடைய மார்பைப் பார்க்கும்படியாக அவர் அணிந்திருந்த அங்கி திறந்திருந்தது. அந்த அங்கியைத் தவிர வேறெந்த ஆடையும் அவர் அணிந்திருக்கவில்லை.

அவருடைய அங்கி மட்டும் அதிக வெண்மையாய் இருக்கவில்லை, அவருடைய முழுச்சரீரமும் கூட விவரிக்கமுடியாத மகிமை பொருந்தினதாகவும் இருந்தது, அவர் முகம் உண்மையிலேயே மின்னலுக்கொப்பானதாகக் காணப்பட்டது. அந்த அறையானது மிகவும் பிரகாசம் பொருந்தினதாகவும் இருந்தது, ஆனால் அவரின் சரீரத்தை உடனே சூழ்ந்திருந்ததைப் போல் அதிக பிரகாசமானதாக இல்லை. நான் முதலில் அவரைப் பார்த்தபோது பயந்தேன், ஆனால் விரைவிலேயே அந்தப்பயம் என்னைவிட்டு நீங்கிற்று.

அவர் என்னை பெயர் சொல்லி அழைத்து, தான் தேவ சமூகத்திலிருந்து அனுப்பப்பட்ட ஒரு தூதன் என்றும், அவருடைய பெயர் மரோனி என்றும் நான் செய்வதற்காக தேவன் ஒரு காரியத்தை வைத்துள்ளார் என்றும், எனது பெயர் நன்மை மற்றும் தீமையாக எல்லா தேசங்களிலும், இனத்தாரிடத்திலும், மொழியினரிடத்திலும் அல்லது ஜனங்களிடையே இது நன்மையாகவோ, தீமையாகவோ பேசப்படும் என்று கூறினார்.

மேலும், இந்தப் பிரபஞ்சத்தின் பூர்வீக குடிமக்கள் எங்கிருந்து வந்தார்கள் என்ற ஆதாரத்தின் வரலாற்றை உடைய, தங்கத்தகடுகளின் மீது எழுதப்பட்ட புத்தகம் ஒன்று பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார். பூர்வீக குடிமக்களுக்கு இரட்சகர் அளித்த

பரிபூரண நித்திய சுவிசேஷம் இதில் அடங்கியுள்ளது என்றும் கூறினார்.

மேலும், வெள்ளிப் பேழைக்குள் இரண்டு கற்கள் இருக்கின்றன, அவைகள் மார்க்கவசத்தோடு இணைக்கப்பட்டு ஊரீம் , தும்மீம் என்றழைக்கப்பட்டு தகடுகளோடு பாதுகாக்கப்பட்டுள்ளன; பழங்காலத்தில் அல்லது முற்காலத்தில் இவைகளை வைத்திருப்பவர்களும் உபயோகிப்பவர்களும் ஞானதிருஷ்டிகாரர்கள் எனப்பட்டனர். மேலும் இந்தப் புத்தகத்தை மொழிப் பெயர்க்கும் நோக்கத்திற்காகவே தேவன் இந்தக் கற்களை ஆயத்தம் செய்து வைத்திருக்கிறார் என்று சொன்னார்.

இவைகளை அவர் எனக்குச் சொல்லிய பின்பு, பழைய ஏற்பாட்டில் உள்ள தீர்க்கதரிசனங்களை எனக்கு எடுத்துரைக்க ஆரம்பித்தார். அவர் முதலில் மல்கியாவின் புத்தகம் மூன்றாம் அதிகாரத்தில் ஒரு பாகத்தை எடுத்துரைத்தார். மேலும் அதே மூன்றாம் அதிகாரத்தில் ஒரு பாகத்தை எடுத்துரைத்தார். மேலும் அதே தீர்க்கதரிசனத்தைப்பற்றிய நான்காவது அல்லது கடைசி அதிகாரத்தையும் எடுத்துரைத்தார். நம் வேதாகமத்தில் காணப்படுகிறபடியன்றி கொஞ்சம் வித்தியாசமாக அவைகள் இருந்தன. வேதாகம புத்தகத்தில் காணப்படுகிறபடி முதல் வசனத்தை



*கி.பி. 421ல் தீர்க்கதரிசி மரோனி தனது ஜனங்களின் பரிசுத்தப் பதிவேடுகளை குமோரா குன்றில் புதைத்து வைத்தார். பின்னர் உயிர்த்தெழுந்தவராக திரும்ப வந்து அமெரிக்க கண்டத்தில் வசித்து வந்தவர்களுக்கு இரட்சகரால் கொடுக்கப்பட்ட பூரண சுவிசேஷம் பூரணத்துவம் அடங்கியுள்ள முற்காலத்து பதிவேட்டைப்பற்றி ஜோசப் ஸ்மித்திடம் சொன்னார், அந்தப் பதிவேடுதான் மார்மன் புத்தகம்.*

எடுத்துரைப்பதற்குப் பதிலாக அதைக் கீழ்க்கண்டபடி உரைத்தார்.

இதோ சூளையைப் போல் எரிகிற நாள் வரும், அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமம் செய்கிற யாவரும் துரும்பாய் எரிந்து போவார்கள். ஏனெனில் வருகிறவர்கள் அவர்களை எரித்துப்போடுவார்கள். அது அவர்களுக்கு வேரையையேனும் கிளையையேனும் வைக்காமற்போகும் என்று சேனைகளின் கர்த்தர் கூறுகிறார்.

மறுபடியும் அவர் ஐந்தாவது வசனத்தை இவ்விதமாக உரைத்தார். இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களுக்கு எலியா தீர்க்கதரிசியின் கைகளினால் ஆசாரியத்துவத்தை வெளிப்படுத்துவேன்.

மேலும் அடுத்த வசனத்தை வித்தியாசமாக அவர் எடுத்துரைத்தாவது அவர் பிதாக்களிடத்தில் ஏற்படுத்தின வாக்குத்தத்தங்களை பிள்ளைகளுடைய இருதயங்களில் பிதாக்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தை நாட்டுவார், அப்பொழுது பிள்ளைகளுடைய இருதயங்கள் அவர்களுடைய பிதாக்களிடத்திற்கு திரும்பும். அது அப்படியில்லையெனில் பூமி அவருடைய வருகையின்போது முற்றிலும் நிர்மூலமாக்கப்படும்.

இவைகளோடு கூடவே ஏசாயா பதினோராம் அதிகாரத்தை எடுத்துரைத்து அது நிறைவேறப் போகிறது என்று கூறினார். மேலும் அப்போஸ்தலர்கள் மூன்றாம் அதிகாரத்திலுள்ள இருபத்திரண்டு மற்றும் இருபத்திமூன்றாம் வசனங்களையும் எடுத்துரைத்தார். இவ்வசனங்கள் நம் புதிய ஏற்பாட்டில் இருக்கிறபடியே இருந்தன. மோசே பிதாக்களை நோக்கி உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார். அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவி கொடுப்பீர்களாக. அந்தத் தீர்க்கதரிசியின் சொற்கேளாதவன் எவனோ அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான் என்றார். அந்த தீர்க்கதரிசி கிறிஸ்துவே என்றும், ஆனால் அவருடைய சத்தத்திற்கு செவி கொடாதவர்கள் ஜனத்திலிருந்து அறுப்புண்டுபோகும் அந்த நாள் இன்னும் வரவில்லை ஆனால் கூடிய சீக்கிரம் வரும் என்றும் கூறினார்.

மேலும் யோவேல் தீர்க்கதரிசியின் புத்தகம் இரண்டாம் அதிகாரத்தில் இருபத்தெட்டாம் வசனத்திலிருந்து கடைசி வரை எடுத்துக் கூறினார். இது இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்றும் ஆனால் சீக்கிரமாய் நிறைவேற்றப்படும் என்றும் கூறினார். புறஜாதியாரின் முழுமையடைதல் சீக்கிரமாய் வரவிருக்கிறது என்று மேலும் கூறினார். இங்கே குறிப்பிட முடியாததிலிருந்து அவர் மற்ற அநேக வசனங்களை எடுத்துரைத்து அநேக விளக்கங்களையும் கூறினார்.

மேலும் என்னிடத்தில் அவர் சொல்லிய தகடுகளை நான் பெற்றுக் கொள்ள வேண்டிய காலம் இன்னும்

நிறைவேறாததினால் நான் தகடுகளையும் மார்க்கவசத்தில் இணைக்கப்பட்ட ஊரிம், தும்மீம் என்பவனவற்றையும் ஒருவனுக்கும் காண்பிக்கக்கூடாது என்று என்னிடம் சொன்னார். யாருக்குக் காண்பிக்க வேண்டுமென்று நான் உத்திரவிடப்படுகிறேனோ அவர்களுக்கு மட்டுமே அவற்றை நான் காண்பிக்க வேண்டும். அப்படி பிறருக்கு அவைகளைக் காண்பித்தால் நான் நிர்மூலமாக்கப்படுவேன் என்றும் கூறினார். இந்தத் தகடுகளைக் குறித்து அவர் என்னிடம் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் அந்தத்தகடுகள் வைக்கப்பட்டுள்ள இடத்தை நான் பார்க்கும்படியாக அந்தத் தரிசனம் என் கண் முன் திறக்கப்பட்டது. நான் அந்த இடத்திற்கு சென்றபோது மறுபடியுமாக நான் அதை அறிந்துகொண்டேன், ஏனெனில் அந்த இடத்தை அவ்வளவு தெளிவாகவும் திட்டவட்டமாகவும் தரிசனத்திலே கண்டிருந்தேன்.

> *அந்தத் தகடுகள் வைக்கப்பட்டுள்ள இடத்தை நான் பார்க்கும்படியாக அந்த தரிசனம் என் மனதிற்கு முன் திறக்கப்பட்டது.*

இந்த சம்பாஷணைகளுக்குப் பிறகு அந்த அறையிலிருந்து வெளிச்சமானது என்னிடம் பேசிக் கொண்டிருந்தவரைச் சுற்றி ஒன்று திரண்டது, அந்த அறையானது மறுபடியும் இருட்டாகும்வரை அந்த ஒளி அவரை மட்டும் சுற்றி ஒன்று சேர்ந்து பிரகாசித்தது. நான் பார்த்த அக்கணமே, வானம் வரையில் திறக்கப்பட்ட ஒரு கதிர்வீச்சுப் போல் அவ்வொளி காணப்பட்டது. தான் முற்றிலும் மறையும் வரை அவர் உயர எழும்பினார். பின்பு இந்தப் பரலோக ஒளி அந்த அறைக்குள் தோன்றுமுன் அந்த அறை எவ்வித நிலையில் இருந்ததோ அதே நிலைக்கு விடப்பட்டது.

இந்த வியத்தகு காட்சியின் விசேஷத் தன்மையைக் குறித்து நான் படுக்கையில் படுத்தவனாய் சிந்தித்துக் கொண்டிருந்தேன். இந்த அசாதாரணமான தூதனால் எனக்குச் சொல்லப்பட்டவைகளைக் குறித்து மிகவும் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தேன். இவ்விதமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கும் பொழுது, என்னுடைய அறையானது மறுபடியும் ஒளிபெறத் தொடங்கியதை நான் திடீரென்று கண்டேன். ஒரு வினாடியில் முதல் முறையில் காட்சியளித்த வண்ணமே, அதே பரலோகத்தூதன் மறுபடியும் என்னுடைய படுக்கையருகில் நிற்பதைக் கண்டேன்.

அவர் ஆரம்பித்து முதல் தடவை என்னிடம் கூறிய அதே காரியங்களையே, மறுபடியும் எவ்வித வேறுபாடின்றி என்னிடம் எடுத்துரைத்தார். இவைகளைச் சொல்லிய பின்பு, கொள்ளைநோய், பட்டயம், பஞ்சம் இவைகளினால் ஏற்படும் மிகப்பெரிய அழிவுகளுடன் பூமியில் வந்துகொண்டிருக்கும் பெரிய நியாயத்தீர்ப்புகளை குறித்து என்னிடம் பேசினார். இந்தப் பயங்கரமான நியாயத்தீர்ப்புகள் பூமியில் இந்தத் தலைமுறையிலேயே வந்துவிடும் என்றுரைத்தார். இவைகளை என்னிடம் கூறியபின் முன்போலவே அவர் மறுபடியும் உயர எழும்பிச் சென்றுவிட்டார்.

இந்நேரத்திலே என் கண்களிலிருந்து தூக்கம் பறந்தோடிப் போகக் கூடியதாக அவை என் மனதில் அவ்வளவு ஆழமாக பதிந்துவிட்டன. நான் கண்டவைகளாலும் கேட்டவைகளாலும் அடைந்த ஆச்சரியத்தால் மேற்கொள்ளப்பட்டு படுக்கையில் படுத்திருந்தேன். இந்நிலையில் என் படுக்கையருகில் மூன்றாம் முறையும் அதே தூதனை நான் கண்டது எனக்குச் சொல்லமுடியாத ஆச்சரியத்தை கொடுத்தது. முதல் இரண்டு முறையும் என்னிடம் சொன்ன அதே காரியங்களை அவர் என்னிடம் மறுபடியும் சொல்வதை நான் கேட்டேன். என் தந்தையின் குடும்பத்தின் ஏழ்மை நிலையின் காரணமாக பணக்காரனாகும் நோக்கத்திற்காக நான் அந்தத் தகடுகளைப் பெற்றுக்கொள்ளும்படி சாத்தான் என்னை சோதனைக்குட்படுத்த முயற்சிப்பான் என்று எனக்கு ஓர் எச்சரிப்பையும் கொடுத்தார். நான் இதைச் செய்யக்கூடாது என்று என்னைத் தடுத்து, அந்த தகடுகளைப் பெறுவதில் தேவனை மகிமைப்படுத்துவது தவிர வேறு எந்த நோக்கமும் எனக்கு இருக்கக் கூடாது என்றும் தேவனுடைய இராஜ்யத்தைக் கட்டுவதைத் தவிர்த்து மற்றெந்த விதமான நோக்கத்தாலும் நான் ஆட்கொள்ளப்படலாகாது என்றும் சொன்னார் இல்லாவிடில் நான் அவைகளைப் பெற முடியாது என்றும் சொன்னார்.



*நியூயார்க்கின் பல்மைராவிலுள்ள ஸ்மித் பண்ணையிலிருந்து தென்கிழக்காக சுமார் 3 மைல்கள் தூரத்தில் குமோரா குன்று இருக்கிறது. ஜோசப்பின் காலத்தில் வடக்கு எல்லை புல்வெளிகளாலும் தென்பகுதி பரவலான மரங்களாலும் காடுகளாலும் நிறைந்திருக்கிறது. குன்றின் உச்சிக்கருகில் தென்மேற்கு திசையில் தகடுகள் புதைக்கப்பட்டிருந்தன. புகைப்படம் ஆகஸ்டு 1907.*

இந்த மூன்றாம் சந்திப்பிற்குப் பின்னும் முன்போலவே அவர் மறுபடியும் பரலோகத்திற்கு ஏறிச் சென்றார். இப்பொழுது நான் அனுபவித்த அதிசயமான காரியங்களைக் குறித்து சிந்திக்கும்படி மறுபடியும் விடப்பட்டேன்.

மூன்றாம் முறையாக அந்தப் பரலோகத் தூதன் என்னிடத்திலிருந்து பரலோகத்திற்கு மேலே எழும்பிச் சென்றவுடனேயே சேவல் கூவிற்று. விடியற்காலை நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று கண்டேன். இதிலிருந்து எங்களுடைய சம்பாஷணை இரவு முழுவதும் நடந்திருக்க வேண்டும் என்பதை உணர்ந்தேன்.



*மரோனி வருடத்திற்கு ஒரு முறையாக நான்கு வருடங்களுக்கு இந்த தீர்க்கதரிசிக்கு உபதேசம் பண்ணினார். அந்த நான்கு வருடங்கள் முடிந்த பின்பு ஜோசப் தகடுகளைப்பெற்று மார்மன் புத்தகத்தை மொழிபெயர்க்க ஆரம்பித்தார்.*

அதன்பின்பு சீக்கிரமே என் படுக்கையிலிருந்து எழுந்து, வழக்கம்போல் அந்த நாளில் நான் செய்யவேண்டிய அவசியமான வேலைகளைச் செய்வதற்குச் சென்றேன். ஆனால் மற்ற காலங்களில் வேலை செய்தது போலவே வேலை செய்ய நான் முயலுகையில் வேலை செய்ய இயலாதபடி என் பலத்தை முற்றிலும் இழந்தவனாக இருக்கக் கண்டேன். என்னுடன் வேலை செய்து கொண்டிருந்த என் தந்தை என்னில் ஏதோ சரீர பெலவீனம் இருக்கிறது என்றுணர்ந்து என்னை வீட்டுக்குச் செல்லும்படி கூறினார். நான் வீட்டிற்குச் செல்லும் எண்ணத்துடன் புறப்பட்டேன். ஆனால் நாங்கள் இருந்த வயலுக்கு வெளியே இருந்த வேலியைக் கடந்து செல்ல முயலுகையில் என் பலம் என்னைவிட்டு முழுவதுமாக நீங்கியது. உதவியற்றவனாகத் தரையில் விழுந்தேன். கொஞ்சநேரம் எதைப்பற்றியும் முற்றிலுமாக நினைவாற்றலற்றவனாக இருந்தேன்.

என்னைப் பெயர் சொல்லி அழைத்து என்னோடு பேசிக் கொண்டிருந்த ஓர் குரல்தான் என் நினைவிற்கு முதலாவதாக வந்தது. நான் மேலே பார்த்தேன். முன்போலவே ஒளிப்பிரகாசத்தினால் சூழப்பட்டவராய் அதே தூதன் என் தலைக்கு மேல் நின்று கொண்டிருந்ததைக் கண்டேன். அப்பொழுது அவர் முந்தின இரவு என்னிடம் எடுத்துரைத்த காரியங்களையே மறுபடியும் எனக்குச் சொல்லி, என் தந்தையாரிடம் போய் நான் கண்ட தரிசனத்தையும் எனக்குக் கொடுக்கப்பட்ட கட்டளைகளையும் சொல்லும்படியாக எனக்கு உத்தரவிட்டார்.

நான் உடனே கீழ்ப்படிந்து வயலில் இருந்த என் தந்தையிடம் திரும்பிப் போய் நடந்த எல்லாவற்றையும் அவரிடம் கூறினேன். இவை தேவனிடமிருந்து வந்தது என்று அவர் எனக்குப் பதிலளித்து, தூதனால் கட்டளையிட்டப்படியே போய் செய்திடும்படி என்னிடம் கூறினார். நான் வயலை விட்டுச் சென்ற அந்தத் தகடுகள் வைக்கப்பட்டிருப்பதாக அந்தத் தூதன் எனக்குச் சொன்ன இடத்திற்குச் சென்றேன். இதைக் குறித்து தெளிவாகவும் தரிசனம் கிடைத்திருந்தபடியால் அங்கே சென்றடைந்தவுடனேயே தகடுகள் வைக்கப்பட்டிருந்த அந்த இடத்தை நான் கண்டு கொண்டேன்.

## பரிசுத்தப் பதிவேடுகள்

நியூயார்க்கில், ஒண்டாரியோ மாவட்டத்திலுள்ள மான்செஸ்டர் கிராமத்திற்கு அருகில் ஒரு பெரிய மலை இருக்கிறது. அந்தப் பகுதியிலேயே அதுதான் மிகவும் உயர்ந்த மலை இந்த மலைக்கு மேற்புறம், மலையுச்சிக்கு அருகில் ஒரு பெரிய பாறைக்குக் கீழ் இந்தத் தகடுகள் ஒரு கற்பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்தன. இந்தப் பாறையானது பெரியதாக இருந்தது. அதன் மேல் பாகத்தின் மத்தியில் தடிப்பாயும் உருண்டையாயும் ஓரங்களில் மெல்லியதாகவும் இருந்தது. இதனால் அதனுடைய நடுப்பகுதி தரைக்கு மேல் காணப்பட்டது. ஆனால் அதைச் சுற்றிலும் உள்ள ஓரம் மண்ணால் மூடப்பட்டிருந்தது.

மண்ணை அப்புறப்படுத்தியபின், ஒரு நெம்புக்கோலை எடுத்து அந்தப் பாறையின் ஓரத்தில் பதித்து, சிறிது பலத்தை உபயோகித்து அதை நெம்பினேன். உள்ளே பார்த்தேன். அங்கே தூதன் உரைத்த வண்ணமே, உண்மையாகவே அந்தத் தகடுகளையும், ஊரீம் தும்மீமையும் மற்றும் மார்க்கவசத்தையும் கண்டேன். அவைகள் வைக்கப்பட்டிருந்த பெட்டியானது ஏதோ ஒருவிதமான சிமென்ட்டில் அந்தப் பெட்டியின் அடிப்பாகத்தில் உள்ளே பெட்டியின் குறுக்காக இரண்டு கற்கள் வைக்கப்பட்டிருந்தன. இந்த கற்களின் மீது தகடுகளும் அவைகளோடே மற்ற பொருட்களும் வைக்கப்பட்டிருந்தன.

அவைகளை வெளியே எடுக்க முயற்சி செய்தேன். ஆனால் தூதனால் தடுக்கப்பட்டு அவைகளை வெளியே எடுக்கக்கூடிய காலம் இன்னும் வரவில்லை என்றும்,

அக்காலம் அன்றிலிருந்து சரியாக இன்னும் நான்கு வருடங்கள் வரை வராது என்றும், ஆனால் அன்றிலிருந்து சரியாக ஒரு வருட முடிவில் அந்த இடத்திற்கு நான் மறுபடியும் வரவேண்டும் என்றும் அப்பொழுது என்னை அந்த இடத்தில் அவர் சந்திப்பார் என்றும் அவ்விதமாகவே அந்தத் தகடுகளை நான் பெறும் காலம் வரும் வரைக்கும் தொடர்ந்து வரவேண்டும் என்றும் அவர் என்னிடம் கூறினார்.

எனக்கு கட்டளை கொடுக்கப்பட்டபடியே, ஒவ்வொரு வருட முடிவிலும் அவ்விடத்திற்குச் சென்றேன். ஒவ்வொரு முறையும் அதே தூதனை அங்கு சந்தித்தேன். கர்த்தர் என்ன செய்யப்போகிறார், மற்றும் எப்படி, எவ்விதத்தில் கடைசி காலத்தில் அவருடைய இராஜ்யம் இப்பூமியில் நிர்வகிக்கப்பட வேண்டும் என்பன குறித்தும் எங்களது ஒவ்வொரு நேர்முக சந்திப்பின் போதும் அவரிடமிருந்து அறிவுரைகளையும் அறிவையும் பெற்றுக் கொண்டேன்.

*இந்த மலைக்கு மேற்புறம் மலையுச்சிக்கு அருகில் ஒரு பெரிய பாறைக்கு கீழ் இந்தத் தகடுகள் ஒரு கற்பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்தன.*

என்னுடைய தந்தையின் இவ்வுலக வாழ்க்கையின் பொருளாதார நிலையானது மிகவும் மட்டுப்பட்டதாக இருந்தமையால், எங்கள் கைகளால் உழைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அன்றாடம் கூலிவேலை செய்தும் அல்லது சூழ்நிலைக்கேற்றவாறு மற்ற வேலைகளையும் செய்துவந்தோம். சில சமயங்களில் வீட்டில் இருந்தோம். சிலவேளைகளில் வெளியே செல்வோம் தொடர்ந்து வேலை செய்வதின் மூலம் சௌகரியமான வாழ்க்கை நடத்த முடிந்தது.

*ஜோசப் பலவித வேலைகள் செய்து குடும்பத்தின் ஒரு சௌகரியமான வாழ்வுக்கு வழி அமைத்தார். 1825ஆம் ஆண்டு நியூயார்க்கிலுள்ள செனான்கோ மாவட்டத்தில் அவருக்கு ஒரு வேலை கிடைத்தது. அங்கே அவர் எம்மா ஹேலைச் சந்தித்து, 1927ஆம் ஆண்டு ஜனவரி 18ம் நாள் அவரைத் திருமணம் செய்துகொண்டார்.*

கடைசியாக தகடுகளையும், ஊரீம், தும்மீம் மற்றும் மார்க்கவசத்தையும் நான் பெற்றுக் கொள்ளக் கூடிய காலம் வந்தது. 1827ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22ஆம் தேதி அவைகள் வைக்கப்பட்டிருந்த இடத்திற்கு வழக்கம்போல் வருடக் கடைசியில் சென்றிருந்தபோது அதே பரலோகத்தூதன் அவைகளை என்னிடத்தில் ஒப்படைத்துக் கட்டளையிட்டதாவது அவைகளுக்கு நான் பொறுப்பாளியாக வேண்டும், அவைகளைக் கவனமின்றி அல்லது எனது எதாவது அசட்டைத்தனத்தால் என் கட்டுப்பாட்டுக்கு வெளியே விட்டு விட்டாலோ அல்லது என் கவலையீனத்தால் அவை போகாவிட்டால் நான் அறுப்புண்டுபோவேன். ஆனால் அந்தத் தூதன் மறுபடியும் அவைகளை என்னிடமிருந்து கேட்கும்வரை அவற்றைப் பத்திரப்படுத்த என்னுடைய எல்லா முயற்சிகளையும் நான் பிரயோகிப்பேனாயாயகில் அவைகள் பாதுகாக்கப்படும்.


அவைகளை நான் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்று ஏன் நான் கண்டிப்பாக உத்தரவிடப்பட்டேன் என்ற காரணத்தையும் என்னைக் கொண்டு தேவைப்பட்டவைகளை நான் எனக்கு உத்தரவிட்டப்படி செய்து அவைகளை செய்து முடித்த பின்பு அவைகளைத் திருப்பி கேட்பேன் என்று தூதன் என்னிடம் ஏன் சொன்னார் என்ற காரணத்தையும் சீக்கிரத்தில் கண்டு கொண்டேன். ஏனெனில், அவைகளை என் வசத்தில் வைத்திருக்கிறேன் என்பதை, மற்றவர்கள் தெரிந்து கொண்ட உடனேயே, என்னிடத்திலிருந்து அவைகளை எடுத்துக் கொள்ள மிகவும் கடுமையான பிரயத்தனங்கள் செய்யப்பட்டன. இந்த நோக்கத்தை நிறைவேற்ற என்னென்ன சூழ்ச்சிகள் அவர்களால் கண்டுபிடிக்கக் கூடுமோ அவையெல்லாம் பிரயோகிக்கப்பட்டன. முன்னிருந்ததைக்காட்டிலும் துன்புறுத்தல் மிகவும் கொடூரமாக மாறியது. சாத்தியமான வழிகளிலெல்லாம் அவைகளை என் வசமிருந்து பறித்துக் கொள்ள திரளான ஜனங்கள் விழிப்புடனே இருந்தார்கள். ஆனால் தேவனுடைய ஞானத்தினால் என்னால் செய்யப்படவேண்டிய காரியங்கள் அனைத்தையும் நான் அவைகளின் மூலம் நிறைவேற்றினவரை அவை என்னிடம் பாதுகாப்பாக இருந்தன. ஏற்கெனவே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தபடி அந்தத் தூதன் அவைகளை என்னிடத்தில் கேட்டபொழுது நான் அவைகளை அவரிடத்தில் திருப்பிக் கொடுத்தேன். அவைகள் அவருடைய வசத்தில் இன்றுவரை, அதாவது 1838ஆம் ஆண்டு மே மாதம் 2ஆம் தேதிவரை இருந்து வருகிறது.

1829ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 5 ஆம் தேதி ஆலிவர் கௌட்ரி என்பவர் என் வீட்டுக்கு வந்தார். அதுவரை அவரை நான் ஒருபோதும் பார்த்ததில்லை. எனது தகப்பனார் வசித்துவந்த இடத்தில் அவர் ஆசிரியர் வேலை செய்ததாகவும், பள்ளிக்கு பிள்ளைகளை அனுப்பியவர்களில் என் தந்தையும் ஒருவராக இருந்தார் என்றும், சில நாட்கள் என் தந்தையின் வீட்டில் தான் தங்கியிருந்ததாகவும், அங்கு தங்கியிருந்த சமயத்தில் என் தந்தையின் குடும்பத்தினர், நான் அந்தத் தகடுகளைப்பெற்ற பெற்ற சூழ்நிலைகளை அவரிடம் விவரித்துக் கூறினதாகவும் அதன்படி என்னிடம் அவைகளைப்பற்றி விசாரித்துத் தெரிந்து கொள்ள, தான் வந்திருப்பதாகவும் கூறினார்.

ஏப்ரல் மாதம் 7ஆம் தேதி அதாவது திரு. கௌட்ரி வந்த இரண்டு தினங்களுக்குப் பின்பு நான் மார்மன் புத்தகத்தை மொழிபெயர்க்க ஆரம்பித்தேன். அவைகளை நான் சொல்ல சொல்ல அவர் எனக்காக எழுதினார்.

*1829ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஜோசப் ஸ்மித் ஆலிவர் கௌட்ரியை எழுத்தாளராக வைத்துக்கொண்டு தேவ*

*னின் வரத்தாலும் வல்லமையினாலும் மார்மன் புத்த கத்தை மொழி பெயர்க்க ஆரம்பித்தார். ஜோசப் மொழிபெயர்ப்பை முடித்த பின்பு, மற்றவர்கள் தங்கத் தகடுகளைப் பார்க்க சிலாக்கியமடைந்தார்கள். கண் ணால் கண்ட இந்த சாட்சிக்காரர்களும் தங்களுடைய சாட்சிகளை பதித்திருக்கிறார்கள். ஏனெனில் சகல காரி யங்களும் மூன்று சாட்சிகளுடைய வாக்கினால் நிலைவ ரப்படும் (2 கொரிந்தியர் 13:1).*



*1830 ஆம் வருடம் ஏப்ரல் 6 ஆம் தேதி பீட்டர் விட்மர் (மூத்தவர்) வீட்டில் பிற்கா லப் பரிசுத்தவான்களின் இயேசு கிறிஸ்து சபை ஸ்தாபிக்கப்பட்டது. ஒரு புதிய மத சங்கத்தை ஸ்தாபிக்கும்படியான நியூயார்க்கின் நிபந்தனைகளை 6 பேர் பூர்த்தி செய்ய அதை சுமார் 60 பேர் சாட்சியாகக் கண்டனர்.*

## ஆசாரியத்துவம் மறுஸ்தாபிக்கப்படுதல்

நாங்கள் மொழிபெயர்ப்பு வேலையைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்த மாதத்தில் 1829 ஆம் வருடம் மே மாதம் ஒரு குறிப்பிட்ட நாளில் நாங்கள் தகடுகளின் மொழிபெயர்ப்பில் சொல்லப்பட்ட பாவ மன்னிப்புக்கான ஞானஸ்நானத்தைக் குறித்து கர்த்தரிடத்தில் விசாரிப்பதற் காகவும் ஜெபிப்பதற்காகவும் காட்டுக்குள் சென்றோம். இவ்விதமாக கர்த்தரை நோக்கி ஜெபித்துக் கூப்பிட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில், ஒளிமயமான மேகத்தில் ஒரு தூதன் பரலோகத்திலிருந்து இறங்கி வந்து, எங்கள் தலைக ளின் மேல் தன் கைகளை வைத்து அபிஷேகம் செய்து கூறி யதாவது:




*1829ம் வருடம் மே மாதம் 15 ஆம் தேதி யோவான் ஸ்நானகனிடமிருந்து, தலைகள் மேல் கைகளை வைப்பதன் மூலம், ஜோசப் ஸ்மித்தும் ஆலிவர் கௌட்ரியும் ஆரோனின் ஆசாரியத்துவத்தைப் பெற்றார்கள்.*

எனது உடன் ஊழியக்காரர்களே உங்கள் மேல் மேசியாவின் நாமத்தினாலே ஆரோனின் ஆசாரியத்து வத்தை நான் அருளுகிறேன். இது தூதர்களின் ஊழியம், மனந்திரும்புதலின் சுவிசேஷம், பாவமன்னிப்புக்குரிய முழுக்கு ஞானஸ்நானம் இவைகளின் திறவுகோல்களை உடையதாயிருக்கிறது. ஆரோனின் ஆசாரியத்துவத்தை மேசியாவின் நாமத்திலே என்னுடைய ஊழியக்காரராகிய உங்களுக்கு அளிக்கிறேன். இந்த ஆரோனின் ஆசாரியத்து வமானது, லெகியின் குமாரர்கள் நீதியின் நிமித்தம் கர்த்த ருக்கென்று மறுபடியும் காணிக்கை செலுத்துகிறவரை ஒருபோதும் பூமியிலிருந்து திரும்ப எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

பரிசுத்த ஆவியின் வரத்திற்காக கைகளைத் தலையின் மேல் வைப்பதற்குரிய வல்லமை இந்த ஆரோனின் ஆசாரி யத்துவத்திற்கு அளிக்கப்படவில்லை, ஆனால் இவ்வல் லமை இனிமேல் பின்னால் அருளப்படும் என்று அவர் சொன்னார், மேலும் போய் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் என்று அவர் எங்களுக்கு கட்டளையிட்டு, நான் ஆலிவர் கௌட்ரிக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் அதன்பின் அவர் எனக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்று வழிமுறைகளையும் எங்களுக் குக் கொடுத்தார்.

அந்தப்பிரகாரமே, நாங்கள் போய் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டோம். முதலாவது நான் அவ ருக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன். அதன்பின்பு அவர் எனக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். இருவரும் ஞானஸ்நா னம் பெற்றுக் கொண்டபின் நான் அவர் தலையின் மேல் என் கைகளை வைத்து ஆரோனின் ஆசாரியத்துவத்திற்கு அவரை நியமித்தேன். அதன்பின்பு அவர் என் தலையின் மேல் தன்னுடைய கைகளை வைத்து என்னை அதே ஆசா ரியத்துவத்திற்கு நியமித்தார். ஏனெனில் இவ்விதமாகவே செய்யும்படி நாங்கள் கட்டளையிடப்பட்டோம்.

இந்த முறை எங்களிடத்தில் வந்து, எங்களுக்கு இந்த ஆசாரியத்துவத்தை அளித்த அந்த தூதன் தன் பெயர் யோவான் என்றும் புதிய ஏற்பாட்டில் அழைக்கப்பட்டிருக்கும் யோவான் ஸ்நானகன் தானே என்றும் மெல்கிசெதேக் ஆசாரியத்துவத்தின் திறவுகோல்களைக் கொண்டிருக்கும் பேதுரு, யாக்கோபு, யோவான் என்பவர்களுடைய உத்தரவின் கீழ் தான் செயல்பட்டதாகவும், ஏற்ற நேரத்தில் இந்த ஆசாரியத்துவம் எங்களுக்கு அளிக்கப்படும் என்றும், நான் சபையின் முதல் மூப்பராகவும் அவர் (ஆலிவர் கௌட்ரி) இரண்டாவது மூப்பராகவும் அழைக்கப்படவேண்டும் என்றும் சொன்னார். நாங்கள் ஞானஸ்நானம் பெற்று, இந்தத் தூதனுடைய கைகளினாலே நியமிக்கப்பட்ட *1829* மே பதினைந்தாம் நாளில் இது நடந்தது.



நாங்கள் ஞானஸ்நானம்பெற்றுக் கரையேறினவுடனே நமது பரலோகப் பிதாவினிடத்திலிருந்து மகத்தான மகிமை பொருந்திய ஆசீர்வாதங்களைப்பெற்றோம். நான் ஆலிவர் கௌட்ரிக்கு ஞானஸ்நானம் கொடுத்தவுடன் பரிசுத்தாவியானவர் அவர் மேல் இறங்கினார். உடனே அவர் எழுந்து நின்று, சீக்கிரம் நிறைவேறப்போகும் அநேக காரியங்களைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்தார். மறுபடியும் அவராலே நான் பெற்றவுடன் நானும் தீர்க்கதரிசனம் உரைக்கும் ஆவிக்குரிய வரத்தைப் பெற்றேன். நான் எழுந்து நின்று, இந்த சபையின் தோற்றத்தைக் குறித்தும், சபையோடு சம்பந்தப்பட்ட அநேக காரியங்களைக் குறித்தும், மனுபுத்திரரின் இந்தத் தலைமுறையினரைக் குறித்தும் தீர்க்கதரிசனங்கள் உரைத்தேன். நாங்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு எங்கள் இரட்சிப்பின் தேவனிலே களிகூர்ந்தோம்.

*ஜோசப் ஸ்மித்தின் எளிய யதார்த்தமான இந்த சாட்சியானது பிற்காலப் பரிசுத்தவான்களின் இயேசு கிறிஸ்து சபையை ஸ்தாபிப்பதற்கும், சுவிசேஷத்தின் மறுஸ்தாபிதத்திற்கும் வழிநடத்தின சில நிகழ்ச்சிகளைக் குறித்தும் கூறுகிறது.*

*ஜோசப் ஸ்மித்தின் சம்பவத்தின் முழு விபரத்திற்கு விலையேறப்பெற்ற முத்து என்ற புத்தகத்தில் உள்ள ஜோசப் ஸ்மித்தின் வரலாறு அல்லது சபை வரலாற்றின் சரித்திரம் 1: 2-70ஐ பார்க்கவும்.*




*மார்மன் புத்தகம் முதலாவதாக 1830ல் அச்சடிக்கப்பட்டு, தற்போது உலகம் முழுவதிலும் 80க்கும் அதிகமான மொழிகளில் வெளியிடப்பட்டு வருகிறது.*